செ.வெ.எண்: 134 நாள்: 20.02.2020

**மனம் திருந்திய முன்னாள் மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு தொழில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நேர்காணல் முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மனம் திருந்திய முன்னாள் மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு தொழில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நேர்காணல் முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ் இஆப., அவர்கள் தலைமையில் இன்று(20.02.2020) நடைபெற்றது.

மனம் திருந்திய முன்னாள் மதுவிலக்கு குற்றவாளிகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தகுதியுடையோருக்கு தொழில் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் வாழ்வாதார உதவிக்காக நடத்தப்பட்ட நேர்காணல் முகாமில் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் தஞ்சாவூர் கோட்டத்தைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்கு பெட்டிக்கடை தொடங்குவதற்கும், கும்பகோணம் கோட்டத்தைச் சேர்ந்த 5 ஐந்து பயனாளிகளுக்கு பெட்டிக்கடை, தேனீர் கடை மற்றும் சிற்றுண்டி கடை தொடங்குவதற்கான நேர்காணலும், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தஞ்சாவூர் கோட்டத்தைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்கு கறவை மாடு வளர்ப்பதற்கும், கும்பகோணம் கோட்டத்தை சேர்ந்த 6 பயனாளிகளுக்கு கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பதற்கும், பட்டுக்கோட்டை கோட்டத்தைச் சேர்ந்த 12 பயனாளிகளுக்கு கறவை மாடு வளர்ப்பதற்கும் நேர்காணல் நடைபெற்றது.

நேர்காணலின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா ரூபாய் 30,000 என மொத்தம் ரூபாய் 9,30,00 நிதி தொழில் தொடங்குவதற்காக வழங்கப்படவுள்ளது.

நேர்காணல் முகாமின் போது, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ரவிச்சந்திரன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் திரு.தமிழ் செல்வம், உதவி ஆணையர்(கலால்) திரு.ரவிச்சந்திரன், மாவட்ட மேலாளர்(டாஸ்மாக்) திரு.அழகர்சாமி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.